துணுக்காய் பிரதேசசபை

முல்லைத்தீவு மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 14 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான 3நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இந்த அறிக்கையின் 1.3 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து துணுக்காய் பிரதேச சபையின் 2013 நிதியாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| <u>நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம</u> | <u>சொத்துக்கள்</u> | | <u>வருமானங்கள்</u> | | <u>பொறுப்புக்கள்</u> | |
|---|---|---|---|---|---|---|
| | <u>சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை</u> | <u>பெறுமதி ரூபா</u> | <u>சந்தர்ப்பங் களின் எண்ணிக கை</u> | <u>பெறுமதி ரூபா</u> | <u>சந்தர்ப்பங் களின் எண்ணிக கை</u> | <u>பெறுமதி ரூபா</u> |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 3இ649இ570 | 01 | 16இ650 | | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | - | - | 02 | 300இ529 |

ii. சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 11 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக்கணக்குகளில் காட்டப்படாமையால் மோட்டார் வாகனங்களினதும் .இயந்திரங்களினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பிரதான பேரேட்டின் பிரகாரம் மூன்று கணக்கு விடயங்கள் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 188இ327 ஆக இருந்ததுடன் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 893இ700 ஆக இருந்தது. இவ்விரு மீதிகளின் வேறுபாடு ரூபா 705இ373 ஆக காணப்படுகிறது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 61இ000 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.4 இணக்கமின்மைகள்

-------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனானதொடர்பு | விபரம் |
| --- | --- |
| 1988ம் ஆண்டின் நிதிநிர்வாக ஒழுங்கு விதி<br>பிரிவு 66 அத்தியாயம் ஐஐ | சபையின் வருமான நிலுவைகள் ரூபா 2இ254இ231 யினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி<br>இலக்கம் 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட நானாவித மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா 123இ249 காலங் கடந்த வைப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. |

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 3இ827இ730 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 601 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு
---------------------------

i. பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 2இ820இ577 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 1இ443இ804 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்
-------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்
-------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| --- | --- | --- | --- |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 3,821 | 3,606 | - |
| குத்தகை வாடகைகள் | 216 | 400 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 205 | 264 | - |
| வேறு வருமானங்கள் | 7,286 | 10,078 | 2,254 |
| | 11,528 | 14,348 | 2,254 |

2.3.2 நீதிமன்ற தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றத்திலிருந்து மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம்இ குற்றப்பணம் ரூபா 1இ564இ450 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அவற்றை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான முகாமைத்துவம்

---------------------------------------

i. மீளாய்வாண்டில் கடை வாடகைஇ ஓட்டோ வாடகைஇ குத்தகை போன்ற வருமான நிலுவைகள் ரூபா 689இ781 அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. துணுக்காய் பிரதேச சபை எல்லையினுள் மூன்று எண்ணிக்கையான தொலைத்தொடர்பு கோபுரங்கள் இயங்குகின்ற போதும் அவற்றிக்குரிய உரிமக்கட்டணங்கள் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

iii. சபை பரப்பினுள் காணப்படும் விளம்பரப் பதாகைகளிற்குரிய விளம்பரக்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

--------------------------------------

i. சபைக்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்ற பயன்படுத்தக்கூடிய பின்வரும் பொருள்கள் பயன்பாடின்றி களஞ்சியத்தில் காணப்படுகின்றது.

| பொருள் வகை | எண்ணிக்கை | வழங்கிய நிறுவனம் | வழங்கிய வருடம் |
|---|---|---|---|
| மண்வெட்டி | 63 | செஞ்சிலுவைச் சங்கம் | 2010 |
| சவள் | 44 | செஞ்சிலுவைச் சங்கம் | 2010 |
| குப்பை வாரி | 49 | செஞ்சிலுவைச் சங்கம் | 2010 |

.

ii. வடக்கு கிழக்கு உள்ளுர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ஐயன் குளம் சந்தை பெறுமதி ரூபா 2இ708இ102 அறிக்கையிடும் திகதி வரையும் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

2.5 சிறந்த முறையில் அமைக்கப்படாத கல்விளான் கொல்கள நிர்மாணிப்பு

---------------------------------------------------------------------------------------------------------------

சபையின் மீளாய்வாண்டில் ரூபா 800இ000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்விளான் கொல்களம் அத்திவாரத்திலிருந்து பல இடங்களில் வெடிப்புக்கள் காணப்படுவதோடு சுவர்ப் பகுதி உடைந்தும் யன்னல்கள் பூட்டுக்கள் பிணைச்சல்கள் சேதமடைந்த நிலையிலும் கூரையை அண்மித்த பகுதியில் பூச்சு வேலைகள் செய்யப்படாத நிலையிலும் காணப்படுகின்றது.

2.6 செயற்பாடுகளில் செயற்திறமையின்மை

-------------------------------------------

மீளாய்வாண்டில் ருஜேஊநுகு நிறுவனத்தினால் தண்ணீர் சுத்திகரிப்பு கருவி தயாரித்தலுக்கான பயிற்சி வழங்கப்பட்டு தண்ணீர் சுத்திகரிப்பு கருவி தயாரித்து கிராம மக்களுக்கு வழங்கும் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடை நிதி ரூபா 916இ045 பயன்பாடின்றி நானாவித வைப்புக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. நன்கொடை

ii. வாகனப் பயன்பாடு

iii. வருமான அறவீடு

iv. மீளளிக்கக்கூடிய நானாவித வைப்பு

v. களஞ்சியப்பகுதி